# கிருபையுள்ள வார்த்தை®

## KIRUBAIYULLA VAARTHAI

லூக்கா (LUKE) 4:22


Vol - 23 | பிப்ரவரி FEBRUARY | 2023

ஆண்டு சந்தா ரூ. 100/- | தனிப் பிரதி ரூ. 10/- | வெளிநாட்டு சந்தா ரூ. 600/-






கௌரவ ஆசிரியர் **BETTY CHOATE** | ஆசிரியர் **பிலேமோன் ராஜா**


புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...


| | |
|---|---|
| ஆசிரியர் உரை | 3 |
| பெண்கள் பகுதி | 7 |
| வாலிபர் பகுதி | 8 |
| வரலாற்றில்.. | 10 |
| சிறுவர் பகுதி | 11 |



*In memory of J.C. CHOATE*

*Guest Editors :* **Betty Choate, Jerry & Paula Bates**

*Editor :* **PHILEMON RAJAH**

ஆசிரியர் குழு

**V. கிங்ஸ்லி ராஜா**, M.Th.,
**R. ஆண்டனி ராஜா**, D.Th.,M.B.A (Bible Studies)
**Dr. V.S. இம்மானுவேல்**, M.Sc., D.D., **C. கியாமிலஸ் கார்த்திக்**, B.Sc.,
**P. பேபி ராஜா** D.Th., **E. ஜோசப் பிரதீப்** B.Th.,

சட்ட ஆலோசகர்கள்

அட்வகேட் B. கருப்பசாமி பாண்டியன் B.A., B.L
அட்வகேட் V. சுப்பிரமணியன் M.A., B.L


## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

**நம்பிக்கை T.V. யில்**

**ஞாயிறு மதியம் 3:30 மணி**

**தமிழன் T.V. யில்**

**ஞாயிறு காலை 7:00 மணி**

செய்தியாளர்கள்

போதகர். **பிலேமோன்ராஜா**, M.A., M.Th.,
(Director - J.C. School of Evangelism)

சகோ. **கிங்ஸ்லி ராஜா**, M.Th.,
(இணை ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை)

**OUR ENGLISH TV PROGRAM**

**SALVATION TV**

**Every Sundays 2pm**

**Speakers:**

**Jerry Bates & Kingsly Rajah**

## வாசகர்கள் கவனத்திற்கு !

உங்களுக்கு அனுப்பப்படும் நமது மாத இதழ், சரியான காரணமின்றி சில நேரங்களில் திரும்பி வருவதால், உங்களுடைய தெளிவான முகவரி மற்றும் தொலைபேசி எண்ணை எங்களுக்கு அனுப்பிவைக்கவும்.

**Phone : 92 4421 4421, 92 4431 4431, 99 9426 7004**

## கிருபையுள்ள வார்த்தை

**நம்மை சத்தியத்தின்படி வழிநடத்தும் சர்வ வல்லவரின் வார்த்தை**


**World Literature Publication :** Post Box No. 15, Arasaradi, Madurai - 625 016. India

# புறக்கணிக்கப்பட்டவர்களிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள்...

## LESSONS TO LEARN FROM THE NEGLECTED...

ஆசிரியர் உரை

Dr. P.C. பிலேமோன் ராஜா



**அன்பான கிருபையுள்ள வார்த்தை வாசகர்கள் அனைவருக்கும், ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் எனது வாழ்த்துக்கள் மற்றும் ஜெபங்கள்.**

ஜனவரி திங்கள் 30ம் நாளை உலகமெங்கும் தொழுநோயினால் பாதிக்கப்பட்டவர்களின் நாளாக அனுசரிக்கின்றனர். பைபிளிலும் தொழுநோயைப் பற்றியும், தொழுநோயினால் பாதிக்கப்பட்டவர்களையும், குணமாக்கப்பட்டவர்களையும் குறித்து படிக்கின்றோம். அவர்கள், சமுதாயத்தினால் இப்பொழுது இருப்பதைவிட அதிகமாகவே புறக்கணிக்கப்பட்டவர்களாக இருந்தனர். அப்படி புறக்கணிக்கப்பட்ட அவர்களிடமிருந்து, புறந்தள்ள முடியாத (கட்டாயம் கடைபிடிக்க, தவிர்க்க வேண்டிய) குணங்களை பற்றி, இந்த மாதம் தியானம் செய்வோம்.

தொழுநோயினைப் பற்றியும் அதின் வீரியத்தினை பற்றியும், அதனால் பாதிக்கப்பட்டவர்களை பற்றியும், நிறைய ஆராய்ச்சிகளுக்கு பின்பு இப்பொழுது நிறைய விழிப்புணர்வுகள் ஏற்பட்டிருக்கலாம். ஆனால், பைபிள் 3500 ஆண்டுகளுக்கு முன்பே தெளிவாக விளக்கி கூறியுள்ளது. லேவியராகமம் 13ம் அதிகாரத்தில் நாம் படித்து அதனை அறிந்துகொள்ள முடியும்.

பைபிளில் தொழுநோயினால் பாதிக்கப்பட்டவர்களையும், அவர்களில் குணமாக்கப்பட்டவர்களையும் குறித்துக்கூட நாம் படித்து அறிந்துகொள்ள முடியும். சிலருக்கு இந்த நோய் தானாக வந்துள்ளது. சிலருக்கு இந்த நோய் தண்டனையாக கொடுக்கப்பட்டது என்றும் அறிய முடிகின்றது. ஆகையினால், தொழுநோயினால் பாதிக்கப்பட்ட சிலரிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய காரியங்களை கற்றுக் கொள்வோம்.

### 1. உசியா ராஜா - தாழ்மையாயிருங்கள்

**2 நாளாகமம் 26:16-21** "அவன் பலப்பட்டபோது, தனக்குக் கேடுண்டாகு மட்டும், அவனுடைய மனம் மேட்டிமையாகி, தன் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாக மீறுதல் செய்து, தூபபீடத்தின்மேல் தூபங்காட்டக் கர்த்தருடைய ஆலயத்திற்குள் பிரவேசித்தான். ஆசாரியனாகிய அசரியாவும், அவனோடே கூடக் கர்த்தரின் ஆசாரியரான பராக்கிரமசாலிகளாகிய எண்பதுபேரும், அவன் பிறகே உட்பிரவேசித்து, ராஜாவாகிய உசியாவோடு எதிர்த்துநின்று; உசியாவே, கர்த்தருக்குத் தூபங்காட்டுகிறது உமக்கு அடுத்ததல்ல; தூபங்காட்டுகிறது பரிசுத்தமாக்கப்பட்ட ஆரோனின் குமாரராகிய ஆசாரியருக்கே அடுக்கும்; பரிசுத்த ஸ்தலத்தை விட்டு வெளியே போம்; மீறுதல் செய்தீர்; இது தேவனாகிய கர்த்தராலே உமக்கு மேன்மையாக லபியாது என்றார்கள். அப்பொழுது உசியா கோபங்கொண்டான்; அவன் தூபகலசத்தைத் தன் கையிலே பிடித்து, ஆசாரியரோடே கோபமாய்ப் பேசுகிறபோது, ஆசாரியருக்கு முன்பாகக் கர்த்தருடைய ஆலயத்திலே தூபபீடத்தின் முன்நிற்கிற அவனுடைய நெற்றியிலே குஷ்டரோகம் தோன்றிற்று. பிரதான ஆசாரியனாகிய அசரியாவும் சகல ஆசாரியரும் அவனைப் பார்க்கும்போது, இதோ, அவன் தன் நெற்றியிலே குஷ்டரோகம் பிடித்தவனென்று கண்டு, அவனைத் தீவிரமாய் அங்கேயிருந்து வெளிப்படப்பண்ணினார்கள்; கர்த்தர் தன்னை அடித்ததினால் அவன் தானும் வெளியே போகத் தீவிரப்பட்டான். ராஜாவாகிய உசியா தன் மரண நாள் மட்டும் குஷ்டரோகியாயிருந்து, கர்த்தருடைய ஆலயத்துக்குப் புறம்பாக்கப்பட்டபடியினால், ஒரு தனித்த வீட்டிலே குஷ்டரோகியாய் வாசம் பண்ணினான்; அவன் குமாரனாகிய யோதாம் ராஜாவின் அரண்மனை விசாரிப்புக்காரனாயிருந்து, தேசத்தின் ஜனங்களை நியாயம் விசாரித்தான்."

உசியா ராஜாவை பற்றி நாம் படிக்கின்றோம். அவர் தொழுநோயுடன் பிறக்கவில்லை என்றாலும், கர்த்தருடைய தண்டனையினால், தொழுநோயாளியானார். காரணம் என்ன? பெருமை (மேட்டிமை), தன்னை பற்றி தானே பெரிதாக எண்ணிக்கொண்டு செயல்படுகின்ற தன்மை. தன்னம்பிக்கை என்பது தவறல்ல, ஆயினும் தற்பெருமை கொடிய பாவமாகும். இரண்டுக்கும் வித்தியாசம் உண்டு. தன்னம்பிக்கை முன்னேற முயற்சிக்க தூண்டும். தற்பெருமை

முன்னேறிவிட்டதாக எண்ணிக்கொண்டு எல்லாவற்றையும் துணிகரமாக செய்ய முயலும். தனக்குமேல் யாருமில்லை என இத்தன்மை அதிகாரத்தினால் உசியா ராஜாவிற்கு ஏற்பட்டது.

ஆசாரியர்களும், பிரதான ஆசாரியர்களும் மாத்திரமே கர்த்தருக்கு தூபம் செலுத்தவோ, பலி செலுத்தவோ வேண்டும். இது கர்த்தருடைய பிரதானமான கட்டளை, ஆசாரியர்களும் தான் அரசன் என்பதால், தன்னிடம் சகல அதிகாரம் தன் நாட்டிற்குள் இருக்கின்றது என்கின்ற மெத்தன போக்கினால், உசியா ராஜா கர்த்தருடைய சமூகத்தில் தூபம் காண்பிக்க முற்பட்டான் அதினால் தன் வாழ்நாள் முழுவதும் தொழு நோயாளியாகவே வாழ்ந்து கழித்தார்.

பெருமை என்ற குணம் கர்த்தருக்கு விரோதமானது. கர்த்தரும் பெருமைக்காரர்களுக்கு விரோதமானவராக இருக்கின்றார். காரணம் பெருமை என்பது மிகவும் மோசமான கெட்ட கொடிய பாவமாக இருக்கின்றது. **யாக்கோபு 4:6** "அவர் அதிகமான கிருபையை அளிக்கிறாரே. ஆதலால் தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறாரென்று சொல்லியிருக்கிறது."

பெருமையினால் வீழ்ந்துபோன அரசுகள், பேரரசுகள், மன்னர்கள், மன்னாதிமன்னர்கள், குடும்பங்கள் மற்றும் தனிமனிதர்கள் என நீண்ட பட்டியலை பைபிளில் உள்ள உலக சரித்திரத்திலும், பைபிளுக்கு வெளியே உள்ள உலக சரித்திரத்திலும் நாம் நிறைய அறிந்துகொள்ள முடியும். மேட்டிமை என்பது ஒருவரை தாழ்த்துமே தவிர, தற்பெருமையாக தன்னை பற்றி பேசுவதாலும், எண்ணுவதாலும் உயர்த்தாது என்பதே நிதர்சனமான உண்மை. கர்த்தருடைய வார்த்தையும் நம்மை அவ்வாறே எச்சரிக்கின்றது. **நீதிமொழி 16:18** "அழிவுக்கு முன்னானது அகந்தை; விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை."

கர்த்தர், தூதர்களை தான் படைத்தார். சாத்தானை படைக்கவில்லை, தூதன் தற்பெருமையினால் சாத்தானான் என்பதும், நம்மிடையே உள்ள அசைக்க முடியா நம்பிக்கையாகவும் இருக்கின்றது என்பதிலிருந்து என்னால் ஒன்றை விளங்கிகொள்ள முடிகின்றது. பெருமையின் ஆவி பரிசுத்த தூதனை சாத்தானாக்கும் என்றால், பரிசுத்தவான்களாகிய நமக்குள் அக்குணம் இருந்தாலும் நாமும் குற்றவாளிகளாவோம் என்பதில் மாற்றுக்கருத்தே இல்லை. **லூக்கா 18:11-14** "பரிசேயன் நின்று; தேவனே! நான் பறிகாரர், அநியாயக்காரர், விபசாரக்காரர் ஆகிய மற்ற மனுஷரைப்போலவும், இந்த ஆயக்காரனைப்போலவும் இராததனால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன், வாரத்தில் இரண்டுதரம் உபவாசிக்கிறேன்; என் சம்பாத்தியத்திலெல்லாம் தசமபாகம் செலுத்தி வருகிறேன் என்று, தனக்குள்ளே ஜெபம் பண்ணினான். ஆயக்காரன் தூரத்திலே நின்று, தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக்கொண்டு; தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்றான். அவனல்ல, இவனே நீதிமானாக்கப் பட்டவனாய்த் தன் வீட்டுக்குத் திரும்பிப் போனான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஏனெனில் தன்னை உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்றார்."

நமக்காக தன்னுடைய ஜீவனையே தந்து, நம்மை மீட்டுக்கொண்ட நமது ஆண்டவர் இயேசுவை போல, மனத்தாழ்மையாக இருப்போம் **(மத்தேயு 11:29)** அதில் மரணபரியந்தம் இருப்போம் **(பிலி 2:5-8)** ஆம்! பெருமையினால் வீழ்ந்துவிடாமல், தாழ்மையினாலே கர்த்தரால் உயர்த்தப்பட்டு, உயர்ந்து நிற்போம். **யாக் 4:10** "கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுங்கள், அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்."

## 2. நான்கு குஷ்டரோகிகள் - நற்செய்தி அறிவியுங்கள்

**2 ராஜாக்கள் 7:8-10** "அந்தக் குஷ்டரோகிகள் பாளயத்தின் முன்னணி மட்டும் வந்தபோது, ஒரு கூடாரத்திற்குள் பிரவேசித்துப் புசித்துக் குடித்து, அதிலிருந்து வெள்ளியையும் பொன்னையும் வஸ்திரங்களையும் எடுத்துக்கொண்டு போய் ஒளித்துவைத்து, திரும்பிவந்து, வேறொரு கூடாரத்திற்குள் பிரவேசித்து, அதிலிருந்தும் அப்படியே எடுத்துக்கொண்டுபோய் ஒளித்து வைத்து, பின்பு அவர்கள் ஒருவரை ஒருவர் நோக்கி; நாம் செய்கிறது நியாயமல்ல, இந்நாள் நற்செய்தி அறிவிக்கும் நாள்; நாம் மவுனமாயிருந்து, பொழுது விடியுமட்டும் காத்திருந்தால் குற்றம் நம்மேல சுமரும்; இப்போதும் நாம் போய் ராஜாவின் அரண்மனையாருக்கு இதை அறிவிப்போம் வாருங்கள் என்றார்கள். அப்படியே அவர்கள் வந்து,

பட்டணத்து வாசல் காவலாளனை நோக்கிக் கூப்பிட்டு; நாங்கள் சீரியரின் பாளைத்திற்குப் போய் வந்தோம்; அங்கே ஒருவரும் இல்லை, ஒரு மனுஷனுடைய சத்தமும் இல்லை, கட்டியிருக்கிற குதிரைகளும் கட்டியிருக்கிற கழுதைகளும், கூடாரங்களும் இருந்தபிரகாரம் இருக்கிறது என்று அவர்களுக்குச் சொன்னார்கள்."

சீரியர்கள் படையெடுத்து, இஸ்ரவேலுக்கு எதிரே வந்து, சமாரியாவை முற்றுகையிட்டனர். உள்ளே தானியங்கள் எதுவும் கொண்டுவர முடியாததினால் சமாரியாவிலே கொடிய பஞ்சம் உண்டானது. அந்த சூழலில் கர்த்தர், தம்முடைய வார்த்தையின்படியே இஸ்ரவேலுக்காக யுத்தம் செய்து, ஆச்சரியமாக விடுதலையாக்கினார். அப்பொழுது சமாரியாவிற்கு வெளியே 4 தொழுநோயாளிகள் தங்களுக்கு உணவு கிடைக்காததால், சமாரியாவிற்கு உள்ளே செல்ல முடியாமல், சீரியரின் பாளயத்திற்கு சென்றனர். அங்கே சீரியர்கள் கர்த்தரால் துரத்தப்பட்டதினால் ஒருவரும் இல்லை. உணவு தானியங்கள் நிறைந்து கிடந்தது. அப்பொழுது அந்த சூழலில் அவர்களுக்கான நற்செய்தி உணவு தானியங்கள் நிறைய இருக்கின்றது என்பதே, அதனை அந்த 4 பேரும் தாமதம் இன்றி சொல்லி மக்களை பஞ்சத்தினால் மடிவதிலிருந்து காப்பாற்றினர்.

இன்றைய நாட்களில் மக்கள் பாவத்தினால் மடிந்து போகின்றனர். கர்த்தர் அனைவரையும் இரட்சிக்க விரும்புகின்றார். அதற்காக தனது குமாரனாகிய ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை பலியாக கொடுத்து, நம்மீது அவர் கொண்ட அன்பை வெளிப்படுத்தியுள்ளார். **யோவான் 3:16** "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்."

இந்த நற்செய்தி மிகமிக அவசரமாக அவனைவரிடமும் கொண்டு சேர்க்க வேண்டிய பொறுப்பும் கடமையும் நம் அனைவருக்கும் உள்ளது. நாம் தள்ளிபோடவோ, தவிர்க்கவோ முடியாத கடமை அது. முதலாம் நூற்றாண்டு பரிசுத்தவான்களும் மற்றும் சபையை பாழாக்கிக் கொண்டிருந்த சவுலும் கூட இந்த நற்செய்தியை தாமதமின்றி மிகுந்த பாடுகள் மற்றும் போராட்டங்களின் மத்தியில் உலகமெங்கும் கொண்டு செல்ல மாபெரும் முயற்சிகளை மேற்கொண்டனர். அவைகளை திறம்பட செய்யவும் செய்தனர். **அப்போஸ்தலர் 8:4** "சிதறிப்போனவர்கள் எங்குந்திரிந்து, சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள்.

இந்தக் காலம் நாம் மௌனமாக இருக்க வேண்டிய காலம் அல்ல, எக்காளத்தினை போல சத்தமிட்டு, பாவத்தின் தண்டனையை பற்றி எச்சரித்து, பரிசுத்தமடைவதற்கான வழி ஆண்டவர் இயேசுவில் மாத்திரமே என்பதை அறிவிக்க வேண்டியவர்களாக தீவிரமாக செயல்பட வேண்டிய நேரமாகும். **ஏசாயா 58:1** "சத்தமிட்டுக் கூப்பிடு; அடக்கிக்கொள்ளாதே; எக்காளத்தைப்போல் உன் சத்தத்தை உயர்த்தி, என் ஜனத்துக்கு அவர்கள் மீறுதலையும், யாக்கோபின் வம்சத்தாருக்கு அவர்கள் பாவங்களையும் தெரிவி.

நாம் ஆண்டவர் இயேசு நமக்கு கொடுத்த பிரதான கட்டளைக்கு கீழ்ப்படிவதை நம் வாழ்வின் பிரதான நோக்கமாக கொள்வோம். **மாற்கு 16:15** "பின்பு, அவர் அவர்களை நோக்கி; நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்." ஆகையால், குறைந்தபட்சம் தினமும் ஒருவருக்காவது ஒரு நிமிடமாவது செலவழித்து நற்செய்தியை பகிர்வோம். நாட்கள் பொல்லாதவைகளாக இருக்கின்றது. நேற்று என்பது கடந்து போயிற்று, நாளை என்பது கனவாக ஆயிற்று. ஆகையினால் கொடுக்கப்பட்ட இந்த நாள் நற்செய்தி அறிவிக்கும் நாள் என்பதை உணர்வோம் மற்றும் அதிதீவிரமாக செயல்படுவோம். அதுவே நம்மை குறித்த கர்த்தரின் சித்தமாகும். **எபேசியர் 5:15-17** "ஆனபடியினாலே, நீங்கள் ஞான மற்றவர்களைப்போல நடவாமல், ஞானமுள்ளவர்களைப் போலக் கவனமாய் நடந்து கொள்ளப்பார்த்து, நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள். ஆகையால், நீங்கள் மதியற்றவர்களாயிராமல், கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்துகொள்ளுங்கள்.

## 3. மோசே - உடனே கீழ்படியுங்கள்

**யாத்திராகமம் 4:6-10** "மேலும், கர்த்தர் அவனை நோக்கி; உன் கையை உன் மடியிலே போடு என்றார்; அவன் தன் கையைத் தன் மடியிலே போட்டு, அதை

வெளியே எடுக்கும்போது, இதோ, அவன் கை உறைந்த மழையைப்போல வெண்குஷ்டம் பிடித்திருந்தது. அவர்; உன் கையைத் திரும்பவும் உன் மடியிலே போடு என்றார். அவன் தன் கையைத் திரும்பத் தன் மடியிலே போட்டு, தன் மடியிலிருந்து அதை வெளியே எடுத்தபோது, அது திரும்ப அவனுடைய மற்றச் சதையைப் போலாயிற்று. அப்பொழுது அவர்; முந்தின அடையாளத்தை அவர்கள் கண்டு, உன்னை நம்பாமலும் உனக்குச் செவிகொடாமலும் போனால், பிந்தின அடையாளத்தைக் கண்டு நம்புவார்கள். இவ்விரண்டு அடையாளங்களையும் அவர்கள் நம்பாமலும், உன் வாக்குக்குச் செவிகொடாமலும் இருப்பார்களானால், அப்பொழுது நீ நதியின் தண்ணீரை மொண்டு நிலத்தில் ஊற்றுவாயாக; நதியில் மொண்ட தண்ணீர் வெட்டாந்தரையிலே இரத்தமாகும் என்றார். அப்பொழுது மோசே கர்த்தரை நோக்கி; ஆண்டவரே, இதற்கு முன்னாவது, தேவரீர் உமது அடியேனோடே பேசினதற்குப் பின்னாவது நான் வாக்குவல்லவன் அல்ல; நான் திக்குவாயும் மந்தநாவும் உள்ளவன் என்றான்."

அடுத்ததாக, நாம் பார்ப்பது மோசே, அவர் தொழுநோயினால் பாதிக்கப்பட்டவரல்ல, ஆயினும் அவருக்கு தொழுநோய் என்பது பார்வோனுக்கு முன்பாக அற்புதம் செய்யும்படியாக கொடுக்கப்பட்டது. எவ்வளவோ காரியங்கள் மற்றும் நோய்கள் இருக்க கர்த்தர் ஏன் அவனுக்கு நொடிபொழுதில் தொழுநோயை வரவைத்து நொடிப் பொழுதில் குணமாக்கி அற்புதம் செய்ய வைத்தார். காரணம் என்ன? மோசே, கர்த்தருடைய சத்தத்திற்கு உடனே அடிபணியாமல், கர்த்தருடைய சத்தத்தினையும், கட்டளையையும் தவிர்க்க வரிசையாக சாக்குபோக்குகள் சொல்லிக்கொண்டே இருந்தான். கடைசியாக கூட வேற யாரையாவது அனுப்பும் என கர்த்தரிடம் பேசக்கூடியவனாக இருந்தான். "சொல்லும் ஆண்டவரே அடியேன் கேட்கிறேன்" **(1 சாமுவேல் 3:10)** என உடனே கீழ்ப்படிந்த சாமுவேலை போலவோ, "இதோ நான் ஆண்டவருக்கு அடிமை" **(லூக்கா 1:38)** என ஒப்புக் கொடுத்த மரியாளை போலவோ உடனே கீழ்ப்படியவில்லை. ஆயினும் பிறகு முழுமையாக கீழ்ப்படிந்து, கர்த்தரே பாராட்டத்தக்கதாக உண்மையுள்ளவராக இருந்தார். **எண்ணாகமம் 12:7** "என் தாசனாகிய மோசேயோ அப்படிப்பட்டவன் அல்ல, என் வீட்டில் எங்கும் அவன் உண்மையுள்ளவன்."

நாம் தினந்தோறும் பைபிள் படிக்கும்போதோ, அல்லது சபைகூடுகையில் கர்த்தருடைய வார்த்தையை தியானிக்கும் போதோ, ஆவிக்குரிய நூல்களை வாசிக்கும்போதோ, கர்த்தருடைய வார்த்தை நாம் செய்த பாவங்களை சுட்டிக்காட்டினால், அவைகளை உடனே விட்டுவிடுவோம் மற்றும் நாம் செய்ய வேண்டிய நன்மைகளை நினைவுபடுத்தினால் உடனே செய்ய துவங்குவோம். அவைகைளை தாமதம் செய்யவும் வேண்டாம், அவைகளை தள்ளிபோடவும் வேண்டாம் மற்றும் தவிர்க்கவும் முயல வேண்டாம். கர்த்தருடைய சத்தத்திற்கு கீழ்ப்படிவதற்கு பதிலீடாக நாம் ஒன்றும் செய்ய முடியாது. ஏனெனில் அதற்கு பதிலீடு ஒன்றும் கிடையாது. **1 சாமுவேல் 15:22,23** "அதற்குச் சாமுவேல்; கர்த்தருடைய சத்தத்துக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும், சர்வாங்க தகனங்களும் பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப்பார்க்கிலும் செவி கொடுத்தாலும் உத்தமம். இரண்டகம் பண்ணுதல் பில்லிசூனியப்பாவத்துக்கும், முரட்டாட்டம் பண்ணுதல் அவபக்திக்கும் விக்கிரகாராதனைக்கும் சரியாய் இருக்கிறது; நீர் கர்த்தருடைய வார்த்தையைப் புறக்கணித்தப் படியினாலே, அவர் உம்மை ராஜாவாயிராதபடிக்குப் புறக்கணித்துத் தள்ளினார் என்றான்."

இறுதியாக, பிரியமானவர்களே, இந்த சமூகத்தினால் புறக்கணிக்கப்பட்டவர்களிடமிருந்து, இன்றைய நாட்களில் கடைபிடிக்க வேண்டிய மிக அவசியமான மூன்று பாடங்களை நாம் கற்றறிந்தோம். ஆகையால் தாழ்மையாக இருப்போம். தாமதிக்காமல் நற்செய்தியை அறிவிப்போம் மற்றும் கர்த்தருடைய சத்தத்திற்கு முழுமையாக அடிபணிவோம், உடனே கீழ்ப்படிவோம். கர்த்தர் தாமே ஆசீர்வதித்து வழிநடத்துவாராக.

அன்புடன்,
**–ஆசிரியர்**

# மிரியாமிடமிருந்து ஒரு எச்சரிக்கை பாடம் !

அன்புள்ளம் கொண்ட பெண்கள் அனைவருக்கும் நம் ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

பெண்களாகிய நாம் பல தருணங்களில் கடவுளுக்கு பிரியமான காரியங்களை அளவில்லாமல் ஆனந்தத்தோடே, அர்பணிப்போடே செய்வது உண்டு. ஆனால் சில சமயங்களில் கவனமில்லாமல், புரிதல் இல்லாமல், தவறுதலாய் செய்துவிடுகின்றோம். நன்மை செய்யும்போது நமக்கு நன்மையும் ஆசீர்வாதங்களும் கிடைக்கின்றது அதை பிறருக்கும் பகிர்கின்றோம். அதுபோல கடவுளுக்கு விரோதமாக நாம் எதையாவது செய்துவிட்டால் அது நம் வாழ்க்கைக்கு சாபமாகவும், பாவமாகவும் வந்து சேர்ந்துவிடும் அந்த தண்டனை நமக்கும், நம்மை சார்ந்து இருப்பவர்களையும் பாதித்துவிடும்.

இதுபோல வேதத்தில் பழைய ஏற்பாட்டில் ஆரோன், மோசே ஆகியோரின் சகோதரியாகிய மிரியாம் கடவுளுக்கு பிரியமான காரியங்களை செய்துவிட்டு பின் அவருக்கு எதிரான காரியத்தையும் செய்தாள் அதனால் அவளுக்கு என்ன நேர்ந்தது என்று வேதாகமத்தின் மூலம் தெரிந்துகொள்வோம்.

இந்த மிரியாம் தான் யாத்:21ஆம் அதிகாரத்தை நாம் வாசிக்கும்போது மோசேயாகிய குழந்தையை பார்வோன் ராஜாவின் கண்களில் இருந்து காப்பாற்றியவள் **(யாத் 2:3–4)** அந்த குழந்தை பார்வோன் இராஜ்யத்தில் வளரும் அதை அதன் தாயே வளர்க்கவும் எல்லாவிதமான வழி வாய்ப்புகளை ஏற்படுத்தியவர் இதை நாம் வேதத்தில் வாசிக்கும் போது முழுமையாக தெரிந்து கொள்ளலாம்.

அதன்பின் வெகு ஆண்டுகள் கழித்து மோசே தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டு எகிப்திலிருந்து இஸ்ரவேல் மக்களை கானான் தேசத்துக்கு வரும்படி நடத்தினார். அப்போது செங்கடலை தேவன் இரண்டாக பிரித்தார் அந்த சமயத்தில் இந்த ஆரோனின் சகோதரியாகிய மிரியாம் மற்ற இஸ்ரவேல் பெண்களை அழைத்து ஒன்றுகூடி தேவனை துதிக்க உற்சாகப்படுத்தினாள் (யாத் 15:20,21) மிரியாம் பெண் தீர்க்கதரிசி என்று யாத்திராகமத்தில் வாசிக்கின்றோம்.

இப்படிப்பட்ட மிரியாம் மோசே ஒரு எத்தியோப்பிய பெண்ணை திருமணம் செய்ததால் மிரியாம் மோசேக்கு எதிராக பேசினாள் அதனாலே கர்த்தர் அவள்மீது மிகவும் கோபம் கொண்டார். மோசே, ஆரோன், மிரியாம் மூவரையும் கூடாரத்திற்கு அழைத்தார். உடனே அவர்கள் அங்கு சென்றார்கள் அப்பொழுது கர்த்தர் அவர்களை நோக்கி தன் தாசனாகிய மோசே கர்த்தருடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவர் அவனுக்கு எதிராக நீங்கள் எப்படி பேசலாம் என்று மிகவும் கடிந்துகொண்டு அந்த கூடாரத்தை விட்டு போய்விட்டார் **(யாத் 12:1–16)**.

அப்பொழுது மேகம் அவ்விடம் விட்டு கடந்தவுடன் மிரியாம் குஷ்டரோகியானாள். இதை கண்ட ஆரோன் மோசேயிடம் நாங்கள் கர்த்தருக்கு எதிராக பாவம் செய்துவிட்டோம். இந்த பாவம் எங்கள் மேல் சுமத்தாதீரும் என்றான். மோசே அவர்களுக்காக கர்த்தரிடம் கெஞ்சினான் 7 நாளைக்கு அவள் பாளையத்துக்கு புறம்பே வைக்கப்பட்டு பின்பு அவள் சேர்த்துக்கொள்ளப்படக்கடவள் என்றார்.

ஆம் பிரியமானவர்களே நாமும் தேவன் பிடிக்காத காரியங்களை செய்தால் தேவன் நம்மை தண்டியாமல் விடார். அதுபோலவே தேவனிடம் மன்னிப்பு கேட்கும் போது நம்மை மீண்டும் வாழ வைப்பார்.

மீண்டும் சந்திப்போம்...

பி. பெவர்லி லிதியா கிங்ஸ்லி

இம்மாதம் பிறந்த நாள் மற்றும்
திருமண நாளைக் காணும்
வாசகர்கள் அனைவருக்கும்
கிருபையுள்ள வார்த்தை
ஆசிரியர் குழுவின் சார்பாக
வாழ்த்துக்களும், ஜெபங்களும் !

# நாகமானிடமிருந்து கற்றுக்கொள்ள, தவிர்க்க வேண்டியவை



அன்பான வாலிபர்களே! உங்கள் அனைவரையும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகிறேன். வேதாகமம் நெடுகிலும் அநேகப் பாடங்களை வேதாகம நபர்கள் மூலம் கர்த்தர் தேவப் பிள்ளைகளுக்கு சொல்லுவதை நம்மால் உணர்ந்து கொள்ள முடியும். அந்தப் பாடங்களை நாமும் கடைப்பிடிக்கும் போது கர்த்தருடைய பெரிதான கிருபையை நாமும் பெற்றுக்கொள்வோம் என்பதில் எவ்வளவேனும் ஐயமில்லை.

(I ராஜா 5:1) சீரிய தேசத்தின் இராணுவத் தளபதியாக நாகமான் இருந்தார். ஆகாப் மற்றும் யோசபாத்தின் நாட்களில், சிரியா இஸ்ரவேலுடன் போரிட்டு வென்றது. நாகமானின் நிலை மற்றும் அவர் பெற்ற வெற்றி அவரை ஒரு பெரிய மற்றும் மரியாதைக்குரிய மனிதராக ஆக்கியது. தனிப்பட்ட முறையில் அவர் ஒரு வலிமைமிக்க மனிதராக இருந்தார். ஆனால், அவருக்கு எதிராக அவர் வைத்திருந்தது பேரழிவை ஏற்படுத்தியது. அதாவது அவருக்கு ஒரு பயங்கரமான, குணப்படுத்த முடியாத கொடிய நோய் இருந்தது.

அது மெதுவாக அவருக்கு மரணத்தை விளைவிக்கக் கூடியதாகவும் இருந்தது. நாகமானின் வாழ்க்கையில் மற்ற அனைத்தும் சிறப்பாகவும், வெற்றிகரமாகவும் இருந்தபோதிலும், அவர் ஒரு குணப்படுத்த முடியாத தொழுநோயாளியாக இருந்தார்.

பண்டைய தொழுநோய் தோலில் சிறிய, சிவப்பு புள்ளிகளாக தொடங்கும். பின்னர் நாளடைவில் புள்ளிகள் பெரிதாகி, ஒருவர் பளபளப்பான அல்லது செதில் போன்ற தோற்றத்துடன் வெண்மையாக மாற ஆரம்பிக்கும். விரைவில் புள்ளிகள் உடல் முழுவதும் பரவி தலையிலிருந்து முடி உதிர ஆரம்பிக்கும், பின்னர் புருவங்களிலிருந்தும் கூட விழும். விஷயம் மோசமாகும் சூழலில் விரல் நகங்களும், கால் நகங்களும் தளர்வாகும். அவை அழுக ஆரம்பித்து இறுதியில் விழுந்துவிடும். பின்னர் விரல்கள் மற்றும் கால் விரல்களின் மூட்டுகள் சுருங்கி பற்களால் பிடிப்புத் தன்மை இழந்து ஒவ்வொன்றாய் விழ ஆரம்பிக்கும் தொழுநோய் உண்மையில் மிகவும் கொடூரமான நோயாகவே தெரிகின்றது. பாதிக்கப்பட்டவர் மெது மெதுவாக ரண வேதனையுடன் தன் உறுப்புகளை இழந்துகொண்டே மரணத்தை நோக்கி செல்வார் (II ராஜ 5:2).

இந்தப் படைத்தளபதியாகிய நாகமான் இஸ்ரவேலில் இருந்து ஒரு சிறு பெண்ணை தன் வீட்டுக்கு வேலை, செய்யும்படி அடிமையாக கொண்டு வந்திருந்தான். அந்த இளம்பெண் நாகமானின் வீட்டில் பணிபுரிந்து வருகிறாள், அடிமையாக இருக்குமென்னால் நாகமான் தொழுநோயால் பாதிக்கப்பட்டு இருப்பதை காண முடியவில்லை. அவள் தன் எஜமானிடம் சென்று கடவுள் செயல்படும் ஆச்சரியமான வழிகளை அவனுக்கு விளக்குகிறாள். அநேகமாக அந்த இளம்பெண் ஒரு தெய்வீகமான, தெய்வ பயமுள்ள, பக்தியுள்ள குடும்பத்தில் வளர்க்கப்பட்டிருக்கலாம். இளம் வயதிலேயே குடும்பத்தில் இருந்து எடுக்கப்பட்டாள். இது அவளுடைய பெற்றோருக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். மேலும், அவர்கள் ஒவ்வொரு நாளும் பெண்ணை இழந்து வருந்துகிறார்கள் என்பதில் ஐயமில்லை. ஆனாலும் அவள் எளிமையான முறையில் அவள் கர்த்தருக்கென்று பயன்படுத்தப்பட்டாள். இந்தச் சிறிய வேலைக்காரி உண்மையான கடவுளின் அறிவில் வளர்க்கப்படவில்லை என்றால், அவள் இவ்வளவு பெரிய இரட்சிப்பின் கருவியாக இருந்திருக்கமாட்டாள் (II ராஜ 5:3).

இந்த மாபெரும் படைத்தளபதியாகிய நாகமானின் சிறந்த கீழ்ப்படியும் பண்பை இங்கே காண முடிகின்றது. இளம்பெண் சொற்கேட்க அவர் அநேக பரிசுப் பொருட்களை எடுத்துக்கொண்டு உண்மையான கடவுளின் தீர்க்கதரிசியை பார்க்கும்படி செல்கிறார் (II ராஜா 5:4–2).

### நாகமான் எதிர்பார்த்தது

- தீர்க்கதரிசி தன்னைப் பார்த்து தன் தொழுநோயை தொட்டு சுகமளிப்பார்.
- அதிகாரமுடைய நபர் என்பதால் தன் பரிசுப் பொருட்கள் மூலம் தனக்கு பெரிய மதிப்பு கிடைக்கும்.

### உண்மையில் நடந்தது

- கடவுளின் வார்த்தையை நம்பும்படியாக எலியா தீர்க்கதரிசி தன்னுடைய வேலைக்காரனை அனுப்பி யோர்தான் என்னும் நதியில் ஏழுதரம் முங்கி எழுந்தால் சுகம் உண்டு என்பதாகும்.

தான் விரும்பும்படி தன்னுடைய சுகத்திற்கு கர்த்தர் செயல்படுவார் என நினைத்தார். ஆனால் எலியா மூலம் வந்த கடவுளின் வார்த்தையானது. நாகமானை தாழ்மைக்கு உள்ளாக வழி நடத்துவதாகும். கடவுளின் வார்த்தையை கீழ்ப்படிதலோடு ஏற்றுக்கொள்வதாகவும் இருக்கின்றது.

கடவுள் விரும்பியபடி தன்னை தாழ்த்தி படைத் தளபதி நாகமான் யோர்தான் நதியில் ஏழுதரம் முங்கினான். தெய்வீக சுகம் பெற்றான். இந்த நாகமான் தாழ்மை மற்றும் கீழ்ப்படிதலின் முன்மாதிரியாக நமக்கு முன் நிற்கிறார் பாருங்கள். பிரியமானவர்களே! கடவுளுடைய வார்த்தையை யார் உங்களிடம் கொண்டு வந்தாலும் சரி, அவர்கள் எவ்வளவு பெரியவரோ ! சிறியவரோ ! பணக்காரரோ ! ஏழையோ ! ஆணோ ! பெண்ணோ ! வாலிபரோ ! வயோதிகரோ ! படித்தவரோ ! படிப்பறிவு இல்லாதவரோ ! யாராய் இருந்தாலும் சரி தயவு கூர்ந்து ஏற்றுக்கொள்ளுங்கள். ஏனென்றால் அது உண்மையுள்ள கடவுளின் ஜீவ சத்தியம். பெருமையை களைந்து தாழ்மையாக ஏற்றுக் கொள்ளும் மனநிலையை வளர்த்துக்கொள்ளுங்கள்.

– உங்கள் அண்ணன்

**JP**

## வாசகர்களின் கவனத்திற்கு

அன்பான வாசகர்களே!
உங்கள் ஆண்டு சந்தா தொகையை
G-Pay, PhonePe மூலம் அனுப்பி
உங்கள் சந்தாவை
புதுப்பித்துக் கொள்ளவும்.
நன்றி!

ஆண்டு சந்தா : ரூ. 100/–

**No. 92 4421 4421**

வங்கிக் கணக்கில் செலுத்த,

A/c Name : Kirubaiyulla Varthai
A/c No. : 57022317422
IFSC Code : SBIN0011068
Branch : SBI - Bye Pass Road Branch, Madurai.

## Gospel Through Media by World Evangelism Team

**Philemon Rajah & Kingsly in Tamil on Tamilan TV :** Every Sunday 7.00 - 7.15 a.m (TAMILNADU Contact Mobile : ***92 4421 4421 & 92 4431 4431)*** ***Nambikai TV :*** *Every Sunday 3.30 p.m.* ***Salvation TV :*** *Every Sunday 2.00 p.m.*

**Rajnayagam & Benny Martin in Tamil on Tamilan TV :** Every Monday 7.00 - 7.15 a.m., Every Thursday 9.30 - 10.00 a.m. and Every Saturday 7.15 - 7.30 a.m. - Contact : 98427 30382

**Arjunan in Tamil on Nambikai TV & Radio :** TV : Every Monday & Saturday 7.30 - 7.45 p.m. Radio : Every Saturday 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (TAMILNADU Contact Mobile : 94435 58041)

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradharana TV :** Every Sunday 6.00 p.m. and Saturday 8.00 a.m. **Rakshana T.V :** Every Wednesday 6.30 p.m. and Thursday 2.30 a.m. (ANDRAPRADESH Contact Phone : 08842363722)

**P.R. Swamy & Douglas in Tamil on Radio :** Every Sunday to Wednesday at 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (KARNATAKA Contact Mobile : 098440 70763)

**P.K. Varghese in Malayalam on JaiHind TV :** Every Saturday 6.00 - 6.30 a.m. on Jai Hind Channel. (KERALA Contact Mobile : 94470 35465)

**Sunny, Francis & Vinay David in Hindi on Shubh Sandesh TV :** Every Tuesday 7.00 - 7.30 on Shubh Sandesh Hindi Channel.

**பாடம் - 4**

## பதிவேட்டுச் சான்றுகள்

## Documentary Evidence

கோடெக்ஸ் அலெக்ஸாண்டரிஸ் என்பது எகிப்திலுள்ள அலெக்சாந்திரியாவில் கண்டுபிடிக்கப்பட்டது. இவைகளோடு கூட கி.பி. 100–500ல் நகல் எடுக்கப்பட்ட புதிய ஏற்பாட்டின் கிரேக்கம், லத்தீன், சிலேவியன், எத்தியோப்பியா, சிரியா மற்றும் அர்மெனியன் மொழிகளில் நூற்றுக்கணக்கான நகல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

முன்னாள் பிரிட்டிஸ் அரும்பொருட்காட்சியகத்தின் இயக்குனர் சர்ஃபிரட்ரிக் கென்யான், "புதிய ஏற்பாட்டைப் போல மூலப்பிரதிகள் கோர்க்கப்பட்டு குறுகிய காலத்திலேயே நகல் எடுக்கப்பட்ட புத்தகம் வேறு எதுவுமில்லை என்றும் சொன்னார்.

நாம் குறிப்பிட்ட வரலாற்றுப் புத்தகங்களோடு ஒப்பிடுவோம்; ஏரோடோடஸின் வரலாற்று ஆரம்ப கால நகல் அதின் மூலப் பிரதிகளிலிருந்து 1,350 வருடங்களுக்குப் பிறகு எடுக்கப்பட்டது. தூஸ்டைடெஸின் மூ வரலாற்று நூல், எழுதப்பட்டு 1300 ஆண்டுகால இடைவெளிக்குப்பின் நகல் எடுக்கப்பட்டது. சக்கரவர்த்தி (சீஸரின்) கேலிக் யுத்தங்கள் எழுதப்பட்டதற்கும் நகல் எடுக்கப்பட்டதுக் கிடையேயான காலம் 1000 வருடம் டெமோஸ்தனிஸின் புத்தகம் 1,400 ஆண்டுகளுக்குப் பின்நகல் எடுக்கப்பட்டது. டேஸிசிட்டஸின் ஏகாதிபத்திய ரோம அரசின் கால அட்டவணைக் குறிப்பேடு, 750 ஆண்டுகள், வரலாறு 95 வருடங்களுக்குப் பிறகு நகல் எடுக்கப்பட்டன. இருந்தும், இந்த வரலாறுகளெல்லாம் நமது பள்ளிக் கூடங்களில் நம்பத்தன்மையுடன் போதிக்கப்படுகின்றன.

மற்ற எந்த பதிவேடுகளையும் விட புதிய ஏற்பாடு மிக அதிகமான கையெழுத்துப் பிரதிகளால் ஆதாரமளிக்கப்பட்டுள்ளது; மூலப்பிரதியிலிருந்து நகல் எடுக்கப்பட்ட இடைவெளி காலம் குறுகிய நூற்றாண்டுகளே.

### 4. நகல்களுக்கிடையே காணப்படும் வித்தியாசங்கள் என்ன?

உண்மையில், ஆயிரக்கணக்கான பதிவேடுகளில் சில வித்தியாசங்கள் இருக்கின்றன. இந்த கையெழுத்துப் பிரதிகளெல்லாம், நகல் எடுக்கும் (நகல் பெருக்கி) இயந்திரங்கள் மூலம் எடுக்கப்படவில்லை என்பதை மனதில் கொள்வது அவசியம். தவறுகள் நேராதபடி பெரிய கவனம் செலுத்தியும், மனிதர்களின் தவறுகள் சாத்தியமானதே. எப்படியாயினும், நகல் எடுப்போரில் பெரும்பாலானவர்களின், குறைந்தபட்ச எழுத்துத் தவறுகளும், வார்த்தை (வாக்கிய) வடிவமைப்பும் தான்.

சர். ஃபிராட்ரிக் கென்யான், "புதிய ஏற்பாட்டு வசனங்கள்... மற்ற எந்த புரதான இலக்கியங்களைக்காட்டிலும், சிறப்பான சான்றளிக்கப்பட்ட புத்தகம்" என்று எழுதினார். "அதற்கு உண்டான பிரச்னைகளும் கஷ்டங்களும், சாட்சிகள் போதுமானவைகளாக இல்லை என்பதினாலேயல்ல, அதற்கு கொடுக்கப்பட்ட மிக அதிகமான சாட்சியங்களால்தான்" என்றார்.

திருமறையின் கோட்பாடுகளில் குறைகாணுவோர், திருமறையில் ஆயிரக்கணக்கான பதினாயிரக்கணக்கான தவறுகள் உள்ளன என்று கூறுகின்றனர். அவர்கள் குறிப்பிடுவதெல்லாம், எழுத்து தவறுகள் கொண்ட வார்த்தைகள், விடுபட்ட வார்த்தைகள், மேற்கோளிடப்பட வேண்டிய வாக்கியங்கள்", போன்றவைகளையே சுட்டிக் காட்டுகின்றனர். 5,700 கிரேக்க கையெழுத்துப் பிரதிகளிலிருந்து இந்த குறைகளை சுட்டிக் காட்டுகின்றனர். ஒரு வார்த்தை மூலப்பிரதியிலிருந்து 3000 நகல்களில் தவறாகக் குறிப்பிடப்பட்டால் 3,000 வித்தியாசங்களை பதிவேடு சுட்டிக்காட்டுகிறது. ஹோமர் இல்லியார்டின் புத்தகத்துடன் ஒப்பிட்டால், ஒரு விழுக்காட்டில் ½ பகுதி மட்டுமே வித்தியாசத்தை ஏற்படுத்தும் பிரச்னை. திருமறையின் உபதேசக் கோட்பாடு வித்தியாசங்களினால் எவ்விதத்திலும் ஊறு விளைவிப்பதில்லை. கையெழுத்துப் பிரதிகள் ஒன்றையொன்று ஒப்பிட்டுப் பார்த்து, நிபுணர்கள் புதிய ஏற்பாட்டின் மூலப் பிரதிகளில் ஒப்பீடுகள் மூலம் 99.5 சதவீதம் மிகச் சரியாக இருப்பதாக வாக்குமூலம் அளிக்கின்றனர். ஆணித்தரமான முரண்பாடுகள் வெற்றிகரமாக ஒத்துப் போகின்றன.

- அடுத்த இதழில் தொடரும்...

# விசுவாசமுள்ள குஷ்டரோகி

கடவுளுக்கு பிரியமான செல்லங்களா ! உங்கள் யாவரையும் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகிறேன்.

பிள்ளைகளா, சென்ற மாதம் கடவுள் உருவம் இல்லாதவர் என்ற பைபிள் சம்பவத்தை கற்றுக்கொண்டீர்கள்தானே, இப்ப ஒரு அருமையான பைபிள் சம்பவத்தை பற்றித் தெரிந்துகொள்ளலாமா?

தொழுநோயினால் பாதிக்கப்பட்ட ஒரு மனிதன் இருந்தார். அந்த மனிதர் என்ன செய்தார் தெரியுமா? அவர் ஆண்டவர் இயேசுவின் முன்னே வந்து முழங்கால் போட்டு ஜெபம் செய்தார். என்ன ஜெபம் செய்தார் தெரியுமா? நீர் விரும்பினால் என்னை குணப்படுத்தலாம், அதற்குரிய வல்லமை உமக்கு உண்டு என்று கெஞ்சி ஜெபித்தார்.

பாருங்கள் பிள்ளைகளா, தொழு நோய் உள்ள அந்த அண்ணனுக்காக இயேசு மனது உருகினார். ஆகையால் அந்த அண்ணனை இயேசு தொட்டு, நான் உன்னைக் குணப்படுத்த விரும்புகிறேன். குணமடைவாயாக! என்றார். உடனே நோய் நீங்கி அந்த அண்ணன் குணமடைந்தாங்க.

அப்புறம் இயேசு என்ன சொன்னார் தெரியுமா? நீ புறப்பட்டு உன் வீட்டுக்குச் செல், நான் உனக்காக செய்ததை நீ யாரிடமும் சொல்லாதே என்று சொல்லி அனுப்பினார். ஆனால் அந்த தொழுநோய் உள்ள அந்த அண்ணன் தனக்கு இயேசு செய்ததை தான் பார்க்கும் அனைத்து நபருக்கும் சொன்னார்.

இதிலிருந்து என்ன பாடம் கடவுள் நமக்கு கற்றுத் தருகிறார். தொழுநோய் என்பது கை கால் எல்லாம் புண்ணாக, சலம் வைத்து இருக்கும் அந்த நிலையிலும் அந்த அண்ணன் கடவுளிடம் முழங்கால் போட்டு ஜெபித்தார். அந்த அண்ணன் கடவுள் தனக்கு செய்த நன்மையை அநேகருக்கு



சொன்னார். எனவே நீங்களும் வீட்டில், சபையில் முழங்கால் போட்டு ஜெபிப்பீர்களா! இயேசு செய்த நன்மைகளை, பாவமன்னிப்பு, அம்மா, அப்பா, சபை, நல்ல படிப்பு, இப்படி உங்களுக்கு கர்த்தர் தந்த, செய்த நன்மைகளை சொல்வீர்களா! கடவுள் உங்களை ஆசீர்வதிப்பார்.


**மனப்பாட வசனம் : 1 யோவான் 5:14** "நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம்".

**– அன்பு ஏசுதாஸ்**

## சிறுவர்க்கான கேள்விகள்

1. தொழுநோயாளி ஆண்டவர் இயேசுவிடம் வேண்டியது என்ன?
2. கேயாஸி செய்த பாவம் என்ன?
3. கேயாஸி பெற்ற தண்டனை என்ன?
4. சீமோனின் விருந்து நிகழ்ச்சி மூலம் நீங்கள் கற்றது என்ன?
5. 10 குஷ்டரோகிகளில், ஆண்டவர் இயேசு யாரை பாராட்டினார்?

# கேயாசி



ஹாய் குட்டீஸ்! உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். சீரிய தேசத்து ராஜாவின் படைகளுக்கு தலைவனாயிருந்தவர் பெயர் நாகமான். அவனுக்கு குஷ்டரோகம் இருந்தது. அவர் வீட்டிலே வேலை பார்த்து வந்த இஸ்ரவேல் தேசத்தை சேர்ந்த சின்ன பெண்ணொருத்தி இருந்தாள் அவள் சமாரியா தேசத்திலுள்ள தீர்க்கதரிசியை சென்று பார்த்தால் தன் எஜமானுடைய குஷ்டரோகம் நீங்கிவிடும் என்று சொன்னாள்.

அவள் சொன்னபடியே நாகமான் சீரிய தேசத்து ராஜாவிடம் கட்டளை பெற்று சமாரியாவிலிருந்த தீர்க்கதரிசியை பார்க்க சென்றான். அந்த தீர்க்கதரிசியின் பெயர் எலிசா. அவனுக்கு ஒரு ஊழியக்காரன் இருந்தான் அவன் பெயர் கேயாசி. எலிசா நாகமானிடத்தில் ஆள் அனுப்பியோர் தான் நதியில் ஏழுதரம் மூழ்கி எழுந்திட சொன்னான். அப்படி செய்யும்போது குஷ்டரோகம் நீங்கி சொஸ்தமாவாய் என்றார். எலிசா சொன்னபடியே அவன் செய்தபோது, குஷ்டரோகம் நீங்கி சுகமானான். தான் சுகமானதை கண்ட நாகமான் என்ன செய்தார் தெரியுமா? கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய எலிசாவை கனம்பண்ண விரும்பி அவருக்கு நன்றி செலுத்தும் விதமாக காணிக்கையை செலுத்த வந்தான். எலிசாவோ அதை மறுத்துவிட்டார். இதைக்கண்ட எலிசாவின் ஊழியக்காரனான கேயாசி பண ஆசையினாலே நாகமானுடைய இரதத்தை பின் தொடர்ந்து போய் அவன் கைகளிலே சில பொருட்களை காணிக்கையாக பெற்றுக்கொண்டு வந்து அதை மறைத்தும் வைத்தான். எலிசா அதைப்பற்றி கேட்டபோது பொய் சொன்னான். பண ஆசையினால், பொருளாசையினால் பொய் சொல்லி மறைத்த கேயாசியை எலிசா தீர்க்கதரிசி சபிக்க குஷ்டரோகம் வந்து அவனையும் பிடித்தது கேயாசி பணத்தின்மீது ஆசை வைத்து ஏமாற்றி பொய்சொல்லி பொருட்களை சம்பாதித்தான் அதற்கு தண்டனையாக நாகமானின் குஷ்டரோகம் அவன் மீதும் அவன் பிள்ளைகள் மீதும் வந்தது.

குட்டீஸ்! நீங்களும் பெரியவர்களாகி வேலைக்கு போகும்போது அம்மா அப்பாவிடமும் சரி மற்றவர்களிடமும் சரி பொய் சொல்லி ஏமாற்றி எந்தவொரு வேலையுஞ் செய்யமாட்டேன். பொருட்களையும் வாங்கமாட்டேன் என்று தேவனுக்கு முன்பாக தீர்மானம் எடுத்து தேவ ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ளுங்கள்.

**மனப்பாட வசனம் :** "உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களை பெறுவான். – நீதி

– குயினி பிரதீப்

## பொதுவான செய்திகள்

### 10ம் வகுப்பு
பொதுத்தேர்வு அட்டவணை

FROM 10AM TO 1.15PM

| DATE | DAYS | SUBJECT |
|---|---|---|
| 06.04.2023 | வியாழன் | தமிழ் |
| 10.04.2023 | திங்கள் | ஆங்கிலம் |
| 13.04.2023 | வியாழன் | கணிதம் |
| 17.04.2023 | திங்கள் | அறிவியல் |
| 20.04.2023 | வியாழன் | சமூக அறிவியல் |

### 11ம் வகுப்பு
பொதுத்தேர்வு அட்டவணை

FROM 10AM TO 1.15PM

| DATE | DAYS | SUBJECT |
|---|---|---|
| 14.03.2023 | செவ்வாய் | தமிழ் |
| 16.03.2023 | வியாழன் | ஆங்கிலம் |
| 20.03.2023 | திங்கள் | இயற்பியல், பொருளாதாரம் |
| 24.03.2023 | வெள்ளி | உயிரியல், தாவரவியல், வரலாறு |
| 28.03.2023 | செவ்வாய் | வேதியியல், கணக்குப்பதிவியல் |
| 30.03.2023 | வியாழன் | கணினி அறிவியல் |
| 05.04.2023 | புதன் | கணிதம், விலங்கியல், வணிகவியல் |

### 12ம் வகுப்பு
பொதுத்தேர்வு அட்டவணை

FROM 10AM TO 1.15PM

| DATE | DAYS | SUBJECT |
|---|---|---|
| 13.03.2023 | திங்கள் | தமிழ் |
| 15.03.2023 | புதன் | ஆங்கிலம் |
| 17.03.2023 | வெள்ளி | கணினி அறிவியல் |
| 21.03.2023 | செவ்வாய் | இயற்பியல், பொருளாதாரம் |
| 27.03.2023 | திங்கள் | கணிதம், விலங்கியல், வணிகவியல் |
| 31.03.2023 | வெள்ளி | உயிரியல், தாவரவியல், வரலாறு, வணிக கணிதம் |
| 03.04.2023 | திங்கள் | வேதியியல், கணக்கியல், புவியியல் |

# மிகச் சிறந்ததை கொடுப்போம்



அன்பான மழலை செல்லங்களுக்கு ஆண்டவர் இயேசுவின் நாமத்தினாலே அக்கா அன்போடு வாழ்த்துகின்றேன். இந்த முறை நாம் தொழுநோயினால் பாதிக்கப்பட்ட ஒருவரிடமிருந்து மிக அருமையான ஒரு காரியத்தினை கற்றுக்கொள்ளப் போகின்றோம். நீங்க ரெடி தானே?

பெத்தானியா என்ற ஊரிலே தொழுநோயாளியாக இருந்த சீமோன் என்பவர் தனது வீட்டிலே விருந்து ஒன்றை செய்தார். அந்த விருந்திற்கு ஆண்டவரும் அவருடைய அப்போஸ்தலர்கள் 12 பேரும் சென்றிருந்தனர். சீமோன் வீட்டிலே ஆண்டவர் பந்தியிருக்கும் போது, ஒரு பெண் விலையேறப் பெற்ற பரிமளதைலமுள்ள வெள்ளைக்கல் பரணியைக் கொண்டுவந்து,அந்தத் தைலத்தை ஆண்டவரின் தலையின் மீது ஊற்றினாள்.

அந்த பெண் யார் தெரியுமா? அவள் தான் மரியாள், மார்த்தாள் மற்றும் லாசருவின் சகோதரி. அவர்களும் அந்த பெத்தானியாவை சார்ந்தவர்கள் தான். அது மட்டுமல்லாது அந்த தைலத்தினை இயேசுவின் பாதங்களில் பூசி தன் தலைமயிரால் அவருடைய பாதங்களைத் துடைத்தாள். அந்த வீடு முழுவதும் தைலத்தின் பரிமளத்தினால் நிறைந்தது.

அந்த தைலம் மிகவும் விலையுயர்ந்ததாக இருந்ததினால் யூதாஸ்காரியோத் மிகவும் கோபமுற்றார். மேலும், இந்த தைலத்தினை இப்படி வீணடிப்பதற்கு பதிலாக, இதனை விற்று பிச்சைக்காரர்களுக்கு கொடுத்திருக்கலாமே என ஐடியாவும் கொடுத்தார். யூதாஸின் பேச்சிக்கு மற்ற அப்போஸ்தலர்கள் தலையாட்டினர். ஆயினும், யூதாஸ் பிச்சைக்காரர்கள் மீது அக்கரையினால் அதனை சொல்லாமல், பண ஆசையினால் அப்படி சொன்னார் என மற்றவர்களுக்கு தெரியவில்லை.

ஆண்டவர் இயேசுவோ, அவர்களை நோக்கி : நீங்கள் இந்த பெண்ணை என் தொந்தரவுபடுத்துகிறீர்கள்? என்னிடத்தில் அவள் நற்கிரியை தானே செய்திருக்கிறாள். மேலும், தரித்திரர் எப்போதும் உங்களிடத்தில் இருக்கிறார்கள்; எப்பொழுது வேண்டுமானாலும் அவர்களுக்கு



செய்யலாம். ஆனால், நானோ எப்போதும் உங்களிடத்தில் இரேன்.

இவர் இந்தத் தைலத்தை என் சரீரத்தின்மேல் ஊற்றினது என்னை அடக்கம் பண்ணுவதற்கு எத்தனமான செய்கையாயிருக்கிறது. இந்தச் சுவிசேஷம் உலகத்தில் எங்கெங்கே பிரசங்கிக்கப்படுமோ அங்கங்கே இவளை நினைப்பதற்காக இவள் செய்ததும் சொல்லப்படும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொல்லி அவளை பாராட்டினர்.

செல்லங்களே, குஷ்டரோகியாகிய சீமோன் தான் ஆண்டவருக்கு விருந்து கொடுத்தார். ஆனால் பாராட்டினை மரியாள் பெற்றுக்கொண்டார். காரணம் என்ன? இந்த சீமோனிடமிருந்து நாம் கற்பது என்ன? நம்மிடம் உள்ளதை கொடுப்பதைவிட, நம்மிடம் உள்ளதில் மிகவும் சிறந்ததை ஆண்டவருக்கு கொடுக்க வேண்டும். ஏனெனில் ஆண்டவர் இயேசு எல்லாவற்றையும், எல்லாரையும்விட மிகவும் சிறந்தவர்.

**மனப்பாட வசனம் : ரோம 12:1** "அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரத்தங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன். இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராததனை.

**– பிரியா ஆண்டனி**

# பத்து குஷ்டரோகிகள்


ஹாய் செல்லக்குட்டீஸ்! உங்கள் எல்லாருக்கும் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தினாலே உங்களுக்கு வாழ்த்துக்களையும், ஸ்தோத்திரங்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

உலகத் தொழு நோயாளிகள் தினம் ஜனவரி 30ம் தேதியாக அனுசரிக்கப்படுகிறது. இந்நாளில் தொழு நோயைப் பற்றிய விழிப்புணர்வு மக்களுக்கு அளிக்கப்படும். இதே தலைப்பில் இந்த மாதம் வேதாகமத்தில் உள்ள குஷ்டரோகியும் தொழுநோயாளி அவர்களை குணமாக்கிய இயேசு கிறிஸ்துவைப் பற்றியும் ஒரு சம்பவத்தைப் பார்க்கலாமா?

அக்காலத்திலே குஷ்டரோகிகள் வீட்டைவிட்டு ஊரைவிட்டு ஒதுங்கியே இருக்க வேண்டும். குஷ்டரோகத்திற்கு மருந்துகளும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கவும் இல்லை. அப்படியே அவர்கள் குணமானாலும் முதலில் ஆசாரியரிடத்தில் சென்று தங்களை காண்பித்து குணமானதை ஆசாரியன் உறுதிப்படுத்திய பின்புதான் வீட்டிற்குச் செல்லலாம்.

அப்படிப்பட்ட ஒரு காலக்கட்டத்தில் இயேசு பல ஊர்களுக்குப் போய், சுவிசேஷத்தைப் பற்றி சொல்லிவிட்டு, இவ்வூருக்கு வருகிறார். அப்பொழுது இந்த பத்து குஷ்டரோகிகளும் தூரத்தில் நின்று "ஐயரே! எங்களுக்கு இரங்கும் என்று சத்தமிட்டுக் கூப்பிடுகிறார்கள் இயேசு எதுவும் செய்யாமல், "நீங்கள் போய் ஆசாரியருக்கு உங்களைக் காண்பியுங்கள்" என்று சொன்னார். அவர்களும் அவருடைய (இயேசுவினுடைய) வார்த்தையை நம்பிப்போனார்கள். போகும் வழியில் அவர்கள் இயேசுவின் வார்த்தைகளாலே சுத்தமானார்கள் சுகமடைந்த ஒன்பது பேரும் ஆசாரியருக்குத் தங்களைக் காட்டிவிட்டுப் போய்விட்டனர். ஆனால், ஒருவனோ இயேசுவிடம் திரும்பி வந்து உரத்த சத்தமிட்டு தேவனைத் தொழுது இயேசுவின் பாதத்தில் விழுந்தான்.

இயேசு 10 பேருக்கும் சுகம் கொடுத்தார். ஆனால், அந்த ஒருவனோ ஆண்டவரை நெருங்கி வந்தான். தேவைக்கு ஆண்டவரே என்று கதறியழுது பின்னர் அவரைவிட்டு விலகித் தூரமாய்ப் போன நேரங்கள் நம்முடைய வாழ்வில் உண்டா?



தேவைகளும், கஷ்டங்களும், துன்பங்களும் நெருங்கும்போது தேவனை முழுமூச்சாய் தேடாதவர்கள் இல்லை எனலாம். ஆனால், தேவைகள் சந்திக்கப்பட்டு, கஷ்டங்கள் நீங்கின வாழ்வில் உயர்வுகள் வசதி வாய்ப்புகள் கிடைத்துவிட்டால் அதே ஆரவாரத்தோடும் அதே வாஞ்சையோடும் தேடுகிறவர்கள் எத்தனை பேர்? நமது தேவைகள் தீர்ந்ததும் தேவனைவிட்டு நம் இஷ்டம்போல வாழுவதையே நாம் காணக் கூடியதாக இருக்கிறது. நான், நாமே, பல சூழ்நிலைகளில அப்படித்தான்.

செல்லங்களா! நாமும் அந்த ஒரு குஷ்டரோகியைப் போல, நமக்கு நன்மை கிடைத்த பின்பும், கடவுளை தேடுகிறவர்களாகவும், அவருக்கு நன்றி சொல்லுகிறவர்களாகவும் இருக்க வேண்டும்.

**மனப்பாட வசனம்: கொலோ 3:15** "தேவசமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது, இதற்கென்றே நீங்கள் ஒரே சரீரமாக அழைக்கப்பட்டீர்கள். நன்றியறிதலுள்ளவர்களாயுமிருங்கள்.

**– ரா. ஏஞ்சலின் கமலம்**

## சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

1. M. ராஜா – கரூர்
2. M. ஜோனா – கரூர்
3. பிரசன்னா – சித்தோடு
4. A. கார்பஸ் பிலேமோன் – மதுரை
4. A. ஹானா ஆண்டனி – மதுரை

## பிப்ரவரி மாத கேள்விகள்

1. தொழுநோயின் விழிப்புணர்வு உள்ள வசன பகுதி எது?
2. உசியா ராஜா செய்த பாவம் என்ன?
3. தேவன் யாருக்கு எதிர்த்து நிற்கிறார்?
4. தன்னைத்தானே உயர்த்துகிறவன் என்ன செய்யப்படுவான்?
5. நான்கு குஷ்டரோகிகள் ஒருவரையொருவர் பார்த்து சொன்னது என்ன?
6. சிதறிப் போனவர்கள் எங்கும் திரிந்து என்ன செய்தனர்?
7. மிரியாம் ஏன் குஷ்டரோகியானாள்?
8. நாகமான் எப்பொழுது சுகமானார்?
9. கர்த்தருடைய வார்த்தைக்கு மரியாள் எவ்வாறு கீழ்ப்படிந்தார்?
10. கர்த்தருடைய சத்தத்திற்கு சாமுவேல் எவ்வாறு அடிபணிந்தார்?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 5-03-2023**

அனுப்ப வேண்டிய முகவரி : **சகோதரி. பேபி ராஜா**
45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை - 625 016
செல் : 92 4421 4421, 92 4431 4431

### சென்ற இதழ் பதில்கள்

1. எபிரெயர் 6:18
2. 2 நாளாகமம் 6:15
3. எபிரெயர் 13:8
4. எபிரெயர் 11:11
5. யாக்கோபு 1:17
6. 2 தீமோத்தேயு 2:13
7. 1 யோவான் 1:9
8. 2 தெசலோனிக்கேயர் 3:3
9. எண்ணாகமம் 23:19
10. 1 கொரிந்தியர் 1:9

### சென்ற இதழ் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

1. Mrs. மேரிராஜ் – மதுரை
2. C. வைலட் கிறிஸ்டோபர் – தளவாய்புரம்
3. Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் – சேலம்
4. Mrs. தெல்மா ஸ்டான்லி – மதுரை
5. J. கிறிஸ்டோபர் சாந்தகுமார் – மதுரை
6. G. ஏஞ்சலம்மாள் – மதுரை
7. M. ஈஸ்வரி – கரூர்
8. J. விஜய் – மதுரை
9. G. பீற்றர் பால்ராஜ் – ஆறுமுகநேரி
10. A. அன்னத்தாய் ஆல்பர்ட் – தூத்துக்குடி
11. Mrs. சாந்தி வில்லியம் – புதுக்கோட்டை
12. A. லலிதா – புதுக்கோட்டை
13. Mrs. ஹெலன் திலக் – தூத்துக்குடி
14. S. அசோக்குமார் பிரின்ஸ் – தூத்துக்குடி
15. A. டேவிட் ஜெயச்சந்திரன் – மதுரை
16. S.M. தேவிராஜாசிங் – திருப்பூர்
17. Mrs. சாந்தி ஜோயல் – திருச்சி
18. Mrs. இமல்டா சுந்தர்சிங் – ஈரோடு
19. S. டேவிட் சாந்தகுமார் – தென்காசி
20. P. இந்திரா பாண்டி – திருமங்கலம்
21. K. ராஜா – அந்தியூர்
22. Mrs. குப்பத்தம்மாள் – மூலனூர்
26. Mrs. லட்சுமி – மூலனூர்
27. Mrs. மரியாள் செல்வராஜ் – மூலனூர்
28. Mrs. மீனாள் தெய்வசிகாமணி – மூலனூர்
29. Mrs. ஜெயசுதா பொன்செல்வி – சென்னை
30. Mrs. சூரியா சௌந்தர்பாண்டி – மதுரை
31. P. ஷைனி – காங்கேயம்
32. A. ஆனந்த கதிரோன் – சென்னை
33. Mrs. பாக்கியராஜம் – மதுரை
34. Mrs. பங்கஜம் ஜேம்ஸ் – மதுரை
35. Mrs. J. ஜான்சி – ஆனைமலை
36. Mrs. ஸ்டெல்லா ஜெபகுமார் – நெல்லை
37. S.G. சேகர் – இராணிபேட்டை

**தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும்
அனைவருக்கும் வாழ்த்துக்கள் !**

Place of Publication : **Arasaradi, Madurai**
**Printed & Published by P.C. PHILEMON RAJAH**
**Printed at Classic Printers & Binders Madurai-2 ✆ 94421 23819**
**Registered News Paper No. : TNTAM/2011/42166**
**Postal Registration No. : TN/MA/67/2021 - 2023**
**Date of Publication : 8th February 2023**
**Posted at Arasaradi HPO on 10th 11th February 2023**

## கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்








அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/–மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!

## தபால் வழி பைபிள் பாடங்கள்






## கைபிரதிகள்









உங்கள் சுவிசேஷ ஊழியத்திற்கு கைபிரதிகள் பல்வேறு தலைப்புகளில் பாதி விலையில் கிடைக்கும். விபரங்களுக்கு : 92 4421 4421, 92 4431 4431

## BIBLE STUDY BOOKS IN ENGLISH











AVAILABLE FOR SPECIAL PRICE!

If undelivered please return to :

**EDITOR**
**KIRUBAIYULLA VAARTHAI**

45 C/1, Church Lane,
Coronation Street, Arasaradi,
Madurai - 625 016. India
E-mail : obey2jesus@gmail.com
Cell : 92 4421 4421, 92 4431 4431

To

Visit www.graciousword.org to read kv magazine online
follow us in facebook : NT Gospel Restorers